ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

08.06.2023

தலைப்புச்செய்திகள்

- 1.மகளிர் பாதுகாப்பிற்காக கூடுதலாக300தீர்வுமையங்கள் ஏற்படுத்தப்படும் என்று மத்திய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டு துறை அமைச்சர் திருமதி. ஸ்மிர்தி இராணி கூறியிருக்கிறார்.
- இந்தியாவை வளர்ச்சிமிகு நட்புறவு நாடாக உலகம் தற்போது கண்ணோக்குவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.
- தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் முன்னணிமாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டில், நடப்பு கல்வியாண்டில் பொறியியல் படிப்பில் சேர மாற்றுத்திறனாளிகளும், விளையாட்டு வீரர்களும் அதிகளவில் விண்ணப்பித்துள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. க.பொன்முடி தெரிவித்துள்ளார்.
- தென்மேற்கு பருவமழை கேரள மாநிலத்தில் தொடங்கியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

ΩΩΩΩΩΩ

ஸ்மிர்தி இராணி

நாட்டில் மகளிர் பாதுகாப்பை முன்னிறுத்தி கூடுதலாக அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய 300 One Stop Centre தீர்வு மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று மத்திய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டு துறை அமைச்சர் திருமதி. ஸ்மிர்தி இராணி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பி.ஜே.பி. தலைமையகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், காவல்துறை, மருத்துவம், சட்டஉதவி, கலந்தாலோசனை, தற்காலிக தங்குமிடங்கள் போன்ற அனைத்து வசதிகளும் இதில் அமைந்திருக்கும் என்றார்.

கடந்த 9 ஆண்டுகளில் மகளிர் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களை எடுத்துரைத்த அமைச்சர், நாடுமுழுவதும் பெண்களுக்கான 34 இலவச உதவி எண்கள் செயல்படுதவாக சுட்டிக்காட்டினார்.

அங்கன்வாடி மையங்கள் அனைத்தும் கைப்பேசியுடன் இணைக்கப்பட்டு அதன் சேவை வலுப்படுத்தப் பட்டிருப்பதாக கூறினார்.

ஊட்டச்சத்து கண்டறியும் நடவடிக்கைகள் மூலம் 9 கோடி பயனாளிகள் பயனடைந்திருப்பதாகவும், கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் நலத்திட்டத்தின் கீழ், 3 கோடியே 32 லட்சம் பெண்களின் வங்கி கணக்குகளில் 13 ஆயிரத்து 650 கோடி ரூபாய் நேரடி பணபரிவர்த்தனை நடைபெற்றிருப்பதாக கூறினார்.

418 போக்ஸோ நீதிமன்றங்கள் உட்பட ஆயிரத்து 23 விரைவு நீதிமன்றங்கள் மகளிருக்காக அரசு ஏற்படுத்தி உள்ளது என்றும் கூறினார்.

நாடுமுழுவதும் 780 மாவட்டங்களில் ஆள் கடத்தல் தடுப்பு பிரிவுகள் செயல்படுவதாக அவர் எடுத்துரைத்தார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் கீழ் கடந்த 9 ஆண்டுகளில், நிர்பயா நிதி உட்பட 12 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளதாகவும் திருமதி. ஸ்மிர்திராணி குறிப்பிட்டார்.

ΩΩΩΩΩΩ

ஜெய்சங்கர்

இந்தியாவை வளர்ச்சிமிகு நட்புறவு நாடாக உலகம் தற்போது கண்ணோக்குவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறியிருக்கிறார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் 9 ஆண்டுகால ஆட்சியின் நிறைவை ஒட்டி புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், நாட்டின் வெளியுறவுக் கொள்கை ஈர்க்கத்தக்க வகையில் உள்ளதாக கூறினார்.

இந்திய தூதரக செயல்பாடுகளால் பொருளாதாரத்தில் வலிமைமிக்க நாடாக நம் தேசம் உருவெடுத்திருப்பதாக கூறினார்.

பொருளாதார அளவில் இந்தியாவின் தாக்கத்தை உலக நாடுகள் அங்கீகரித்திருப்பதாக அவர் தெரிவித்தார்

ஜி-20 தலைமைத்துவத்தின்கீழ் அனைத்து நாடுகளுடனும் ஆலோசனைகளை மேற்கொண்ட இந்தியாவின் முயற்சியை 125 நாடுகள் அங்கீகரித்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார தேக்க நிலையில் உள்ள நாடுகளுக்கு உடனடியாக உதவும் வகையில் இந்தியாவின் திறன் மேம்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

நாட்டின் வலிமை மிக்க - ஒருங்கிணைப்புடன் கூடிய வெளிநாட்டுக் கொள்கை குடிமக்களின் வாழ்க்கை முறையை எளிதாக்கியிருப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

பாஸ்போர்ட் சேவை மையங்கள் திறக்கப்பட்டது, பல்வேறு நாடுகளுடனான ஒப்பந்தங்கள், தொழில்நுட்ப ஒத்துழைப்பு போன்றவற்றால் ஏராளமான இளையோர் பயனடைந்திருப்பதாகவும் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறினார்.

ΩΩΩΩΩΩ

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி வரும் 21-ம் தேதி அமெரிக்கா செல்லவுள்ள நிலையில், இந்திய பசிபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்க பிரதிநிதி Kurt Kambalஇருநாடுகளுக்கு இடையிலான தன்னம்பிக்கையின் அளவுகோல் அதிகரித்திருப்பதாக கூறியிருக்கிறார்.

பிரதமர் திரு. மோடியின் அமெரிக்க பயணம் இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவை மேம்படுத்துவதோடு,உலகளாவிய இருதரப்பு பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச்செல்லும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

முதலீடுகள், பல்வேறு துறைகளில் இருநாட்டு மக்களும் இணைந்து செயலாற்றுவது போன்றவற்றிற்கான வாய்ப்புகளுக்கும் வழிகோலும் என்றார்

இரு நாடுகளுக்கு இடையிலான அறிவுசார் ஒத்துழைப்பை எடுத்துரைத்த கேம்பல் பல்கலைக்கழகங்கள் அதிகளவில் பொறியாளர்களையும், உயர் தொழில்நுட்ப வல்லுநர்களையும் உருவாக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

உலகளவில் இந்தியாவின் சீர்மிகு பங்கை சர்வதேச நாடுகள் அங்கீகரித்திருப்பதாக கூறியஅவர் இது அரசியல் சார்ந்தது மட்டுமல்ல என்றார்.

அமெரிக்க நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் வரும் 22-ம் தேதி உரையாற்ற,பிரதமர் திரு. நரேந்திரமோடிக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பு,அந்நாட்டில் பிரதமருக்கான மதிப்பு, மரியாதை, ஆதரவை பிரதிபலிக்கின்றது.

ΩΩΩΩΩΩ

நிதின் கட்கரி

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு, ஜம்முகாஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் நெடுஞ்சாலை கட்டமைப்பை மிக விரைவாக மேம்படுத்தி வருவதாக மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

இப்பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் சுற்றுலா மையமாகவும் ஜம்முகாஷ்மீரை மேம்படுத்துவதற்கானஅனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

இந்நிலையில் நடப்பாண்டிற்கான அமர்நாத் பனிக்குகை யாத்திரை விரைவில் தொடங்வுள்ள நிலையில்,முன்னேற்பாடுகள் குறித்து ஜம்முகாஷ்மீர் தலைமை செயலாளர் டாக்டர் அருண்குமார் மேத்தா இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

ஆபத்தான பகுதிகளில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புக்குழுவினர் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தினார்.

<u>ΩΩΩΩΩΩ</u>

ரிசர்வ் வங்கி

ரிசர்வ் வங்கிபிற வங்கிகளுக்கு வழங்கும் குறுகியகால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் எந்த மாற்றமும் இல்லாமல் 6.5 சதவிகிதமாக தொடர்ந்து பராமரிக்கப்படும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சக்திகாந்ததாஸ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று ரிசர்வ் வங்கியின் இரண்டாவது இருமாத நிதிக்கொள்கையை வெளியிட்டு பேசியஅவர்,நடப்பு நிதியாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு வளர்ச்சி 6.5 சதவீதமாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

பணவீக்கத்தை கட்டுக்குள் வைக்கும் நடவடிக்கைகள் தொடரும் என்றார்.

கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் நுகர்வோர் விலை குறியீட்டிற்கான பணவீக்கம் இலகுவானதாக தெரிவித்த அவர்,சராசரியான பருவநிலை எதிர்பார்ப்புடன் நடப்பு நிதியாண்டில் இவ்விகிதம் 5.1 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நடப்பு நிதியாண்டு முழுமைக்கும் பணவீக்கம் 4 சதவீதத்திற்கும் மேல் இருக்கும் என்று கணிக்கப்பட்டு உள்ளதாகவும் திரு. சக்திகாந்ததாஸ் குறிப்பிட்டார்.

<u>ΩΩΩΩΩΩ</u>

முதலமைச்சர்

தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில்,தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டுத்துறை சார்பில், 762 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 22 தொழிற்பயிற்சி நிலையங்களின், நான்காம் கட்ட தொழில்நுட்ப மையங்களை இன்று திறந்துவைத்து பேசிய அவர், தொழில் நிறுவனங்களுக்கு தேவையான மனித ஆற்றல் தமிழகத்தில் உள்ளதாக குறிப்பிட்டார்.

மின் உற்பத்தியில் மாநிலம் மிகப்பெரிய வளர்ச்சியை கண்டுள்ளதாகவும் முதலமைச்சர் எடுத்துரைத்தார்

..... வாய்ஸ் ....

ΩΩΩΩΩΩ

முதலமைச்சர் டெல்டா

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், காவிரி டெல்டா மாவட்டங்களில் நடைபெறும் தூர்வாரும் பணிகளை நாளை ஆய்வு செய்யவுள்ள நிலையில், மாநில வேளாண் அமைச்சர் திரு. MRK. பன்னீர்செல்வம் தலைமையில் உயர்மட்ட ஆய்வுக்கூட்டம் தஞ்சையில் இன்று நடைபெற்று வருகிறது.

மாநில அமைச்சர்கள் திரு. K.R. பெரியகருப்பண், திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்டோர் பங்கேற்றுள்ள இக்கூட்டத்தில் திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, அரியலூர், கடலூர், ஆகிய 7 மாவட்டங்களின் உயரதிகாரிகளும், விவசாயிகளும் பங்கேற்றுள்ளனர்.

இக்கூட்டத்தில பேசிய அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், 97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள் நடைபெறுவதாகவும், இதுகுறித்த அதிகாரிகளிடம் கேட்டறியப்படும் என்றும் தெரிவித்தார்.

குறுவை நெல் சாகுபடிக்கு தேவையான 7 ஆயிரத்து 182 டன், விதைநெல் கையிருப்பில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ரசாயன உரங்களும் தேவையான அளவு இருப்பில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் தஞ்சைமாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தீபக் ஜேக்கப் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

ΩΩΩΩΩΩ

பொன்முடி

தமிழ்நாட்டில் நடப்பு கல்வியாண்டில் பொறியியல் படிப்பில் சேர மாற்றுத்திறனாளிகளும், விளையாட்டு வீரர்களும் அதிகளவில் விண்ணப்பித்துள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், ஏழரை சதவீத ஒதுக்கீட்டின் கீழ் கல்லூரிகளில் சேர 7 ஆயிரத்து 152 பேர் விண்ணப்பித்து உள்ளதாக குறிப்பிட்டார்.

...... வாய்ஸ் .....

ΩΩΩΩΩΩ

இலவச மின்சாரம்

தமிழ்நாட்டில் வீட்டு இணைப்புகளுக்கு எவ்விதமான மின்கட்டண உயர்வும் இல்லை என்று அரசு தெளிவுபடுத்தி உள்ளது.

கைத்தறி, விசைத்தறிகள் போன்ற அனைத்து இலவச மின்சார சலுகைகளும் தொடரும் என்றும் கூறியுள்ளது.

வேளாண் இணைப்புகள், குடிசை இணைப்புகள், வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் தொடரும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

ΩΩΩΩΩΩ

சுப்ரியா சாகு

தமிழ்நாட்டின் வனப்பரப்பை 33 சதவீதமாக அதிகரிக்க 490 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மரம் வளர்ப்புத்திட்டம் மேற்கொள்ளப்படும் என்று மாநில சுற்றுசூழல் வனத்துறை கூடுதல் தலைமை செயலர் திருமதி. சுப்ரியா சாகு கூறியுள்ளார்

உதகையில் கரியமில வாயு தொடர்பான தேசிய கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், நபார்டு வங்கி நிதியுதவியுடன் 5 ஆண்டு திட்டமாக செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்தின்கீழ் 7 கோடி மரக்கன்றுகள் நடப்படும் என்றார்.

மாநிலத்தில் புதிதாக 14 மாவட்டங்களில் 60 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் சதுப்பு நிலங்களை கண்டறிந்து பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதாக கூறினார்.

மாநிலத்தின் முதலாவது கரியமிலவாயு சமநிலை மாவட்டமாக நீலகிரியை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறினார்.

ΩΩΩΩΩΩ

உலக கடல் தினம்

உலக கடல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

கடல் வளங்களை பாதுகாப்பதன் அவசியத்தையும், மாசுவை தடுக்க விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் ஆண்டுதோறும் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தினத்தையொட்டி நாகை மாவட்டத்தில்பொதுமக்களிடையேயும், மீனவ இருப்பிடங்களிலும் கடற்கரையை பாதுகாப்பாக வைப்பதன் அவசியம் குறித்து தன்னார்வலர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

..... வாய்ஸ் ....

ΩΩΩΩΩΩ

வானிலை

தென்மேற்கு பருவமழை கேரள மாநிலத்தில் தொடங்கியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

இது தென் தமிழக பகுதிகளுக்கும் இது பரவியுள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

வெப்பச்சலனம் காரணமாக மாநிலத்தின ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

கர்நாடகம், தெற்கு அரபிக்கடல், மத்திய கிழக்கு, மத்திய மேற்கு, அரபிக்கடல்பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்லவ வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ΩΩΩΩΩΩ

கிரிக்கெட்

லண்டன் ஓவலில் ICC டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்பட்ட போட்டியில் இந்தியாவிற்கு எதிராக நேற்று ஆட்டநேர இறுதியில் ஆஸ்திரேலியா 3 விக்கெட் இழப்பிற்கு 327 ரன் எடுத்திருந்த நிலையில், இரண்டாவது நாள் ஆட்டம் இன்று பிற்பகல் தொடர்ந்து நடைபெறும்

ஆஸ்திரேலியா 3 விக்கெட் இழந்திருந்த நிலையில் டிராவிஸும், ஸ்டீவ் ஸ்மித்தும் நிலைத்து ஆடி அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

டிராவிஸ் - 146 ரன்னுடனும்

ஸ்டீவ் ஸ்மித் - 95 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

♎♎♎♎♎♎

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

♎♎♎♎♎♎